

தரப்பட்டுள்ள அவகாசம்

ஜபார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெகநாயகம்
20.10.96

தரப்பட்டுள்ள அவகாசம்

கவிதைகள்

ஜபார்

வி.ஜே.பதிப்பகம்

வெளியீடு - 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THARAPPATTULLA AVAKAASAM

A Collection of Poems by

M.I.A.JABAAR ©

First Edition	:	June 1996
Printing	:	Techno Print 6, Jayawardena Ave, Dehiwela.
Cover	:	Thanks To The London Institute
Cover Design	:	M.K.M. Shakeeb
Published by	:	V.J.Publications 6, Urban Council Quarters Gandhi Nagar Trincomalee Sri Lanka.
Price	:	Rs. 50.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பிப் பார்த்து திரும்பிப் பார்த்து
சுவடுகளை விழுங்கியபடி போகிறோம்

பத்து வருடங்களுக்கு முன்னர் 'திறக்கப்படாத தீப்பெட்டிகள்' கவிதைத் தொகுப்பு மூலம் நமக்கெல்லாம் அறிமுகமான கவிஞர் ஜபார் அவர்களின் இரண்டாவது தொகுப்பான 'தரப்பட்டுள்ள அவகாசம்' நூலை தனது இரண்டாவது வெளியீடாக கொணர்வதில் வி.ஜே. பதிப்பகம் மகிழ்ச்சியடைகிறது.

பரவலாகப் பேசப்படும் 'ஆகவே' சிற்றிதழ் ஆசிரியராக, விமர்சகராக, சிறுகதை எழுத்தாளராக, கவிஞராக, நல்ல நண்பராக எனப் பல்வேறு தளங்களில் சம ஆளுமையுடன் இயங்கும் இவரின் இக்கவிதைகள் 1987-1990 காலகட்ட 'இருண்ட நாட்களின்' துயரங்களை மீள்வோட்டம் செய்வன.

சிறுசிறு பொறிகளாக நமக்குத் தரிசனம் கொள்ளக் கிடைக்கும் இக் கவிதைகள் அவை எழுதப்பட்ட காலத்து நிகழ்வுகளையும் மௌனித்திருந்த கோபாவேசங்களையும் பெரும் தீயாய் மூட்ட வல்லவையாய் உள்ளதே சிறப்பம்சமாகும்.

இத்தொகுப்பு பற்றிய அபிப்பிராயங்களை வி.ஜே.பதிப்பகம் பரவலாக எதிர்பார்க்கின்றது.

இத் தொகுப்பு வெளிவர ஒத்துழைப்பு வழங்கிய மு.பொன்னம்பலம், கேசவன் போன்றோருக்கும் நன்றிகள்.

வை.ஜெயமுருகன்
சு. இராஜதுரை

வி.ஜே.பதிப்பகம்
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜபாரின் "தரப்பட்டுள்ள அவகாசம்" கவிதைகள் தனித்துவமானவை.

"எனது நெருப்பு எரியத் தொடங்கி வெகுகாலமாயிற்று
அணைந்து எரிந்து அணைந்து
எரிந்து அணைந்து எரிந்து
எரிந்தபடிதான் இருக்கிறது
அணைந்தே போகாதபடி"

இப்படி ஒரு கவிதை "தரப்பட்டுள்ள அவகாசம்" கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. இதை இக்கவிதைத் தொகுப்பின் குறியீடாகவும், இக்கவிதைத் தொகுப்பின் ஆசிரியரான ஜபார் அவர்களிடம், எமக்குத் தெரியாது. மூண்டெரியத் தொடங்கி இதுவரை நெடிதுயர்ந்து வந்துள்ள கவிதா சக்தியின் பூர்வீகமாகவும் கொள்ளலாம்.

இவரிடம் எரியத் தொடங்கிய கவிதா நெருப்பு எத்தகையது? கவிதா ஹோம குண்டத்தில் அணையாது வளர்க்கப்பட்ட இத்தீயின் பின்னணியால் உச்சாடனம் செய்யப்படும் மந்திரம் என்ன?

எண்பத்தேழுகளின் முற்பகுதியிலிருந்து எண்பத்தெட்டு களின் பிற்பகுதி வரையில் எழுதப்பட்ட இக்கவிதைகள் அக்காலத்தில் தமிழ் மண்ணில் வாழ்ந்த புத்திஜீவி ஒருவனின் கொதிநிலை அடைந்த மனவெளிக் காட்டலாகவும், அதே நேரத்தில் ஒவ்வொரு பொதுமகனும் தன்னால் புரிந்து கொள்ளமுடியாது, தனக்குள்ளேயே ஜீரணித்து விட்ட உணர்வுகளின் பொதுப்பதிவாகவும் நிற்பதோடு, இவற்றுக்கும் மேலாக இத்தனை மன அவலங்களின் மத்தியிலும், இவற்றுக்கெல்லாம் தீர்வுகாண்பது போல் தன் சுயத்தின் அடிநுனி தேடிய ஒருவனின் ஆய்வின் ஆவணமாகவும் இது நிற்பதே மிக முக்கியமானதாகும். மேலும், "தரப்பட்டுள்ள அவகாசம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பில் அடங்கியுள்ள கவிதைகள் எவற்றுக்கும் தலைப்பிடப்படாததால் இவை, இவ்வுணர்வுகளின் பல வர்ணம் காட்டும் கூட்டு பிம்பமாக நிற்கின்றனவென்றால் மிகையாகாது.

''பெருவெளியில் சஞ்சரிப்பதே சுதந்திர முழுமை
அதனால்தான்
சுமைகள் தவிர்த்துக் கட்டுக்களை விடுவிக்கத்
துடிக்கிறேன்''

இக்கவிதைத் தொகுப்பின் மந்திரம் இதுவே. அதாவது விடுதலை உணர்வும் அதன் வழிவரும் பலதள இருப்பும், அதற்கெதிராகக் கிளம்பும் தடைகளை மீறும் போராட்டமுமே. ஏதோ விதத்தில் இத்தொகுப்பின் அநேக கவிதைகள் விடுதலையின் - அதை நோக்கிய வேட்கையின் அதிர்வுகளாகவே உள்ளன.

''முன்னைய வசந்தத்தின் சேமிப்பில்
பச்சை நிறத்திடமிருந்து
அந்நியப் பட்டுப் போகாத சடைத்தசெடி
ஒற்றைப் பூவை தலையில் சுமந்து
மலட்டினை மீறிய பூரிப்புடன்

பாதிப் பகுதி பட்டுப்போன நிலையில்
பசுமையினை ஒருபுறம் தாங்கிய
நெடிதான மரம்
இருப்பில் விசுவாசமுள்ள
ஒரு தெருப்பாடகனாய்

மயானத்தின் மேல்
முகவரியிழக்கும் புல்வெளியில்
தனித்து மேய்ந்தபடி
ஒரு ஆட்டுக்குட்டி.

மயானத்தைக் கடக்கும்
மின்சாரக் கம்பிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடலில் சோர்ந்து போன
ஒரு செண்பகம் வெறுமை படர்ந்திட

அதையும் மீறிப் பறக்கிற பருந்தின்
வட்டத்துள் சிக்கிய மனம்
வானமிழந்த வீட்டு நினைவோடு''

இத்தொகுதியில் இடம்பெறும் ஐந்தாவது கவிதையான மேற்படி கவிதை, நான் குறிப்பிட்ட விடுதலை, இருப்பு என்பவற்றின் கோடி காட்டலோடு அவற்றின் சமூக எழுச்சிக்குத் தடைபோடும் பிரச்சினைகளையும் காட்டுவதாய் உள்ளது.

எல்லா உயிர்களிடத்தும் வாழ்வதற்கான பிரயத்தனமும் முனைப்பும், பச்சை நிறத்திடமிருந்து அந்நியப்பட்டுப் போகாது ''ஒற்றைப் பூவைத் தலையில் சுமந்து மலட்டினை மீறிய பூரிப்புடன்'' நிற்கும் செடியைப் பற்றிக் கூறிச் செல்லும் வரிகளும், '''பாதிப்பகுதி பட்டுப்போன நிலையில் பசுமையினை ஒருபுறம் தாங்கிய இருப்பில் விசுவாசமுள்ள தெருப்பாடகனாய்'' என்று நெடிய மரம் பற்றிக் கூறும் வரிகளும் எல்லா உயிர்களிடத்தும் முனைப்புக் கொள்ளும் இருப்புப் பற்றிப் பேசுகிறது.

''இருப்பில் விசுவாசமுள்ள தெருப்பாடகனாய்'' என்று வரும் அடிகள் மிகவும் கவனிப்புக்குரியவை. எல்லாவற்றுக்கும் இருப்பில் விசுவாசம். இதை எழுதிய கவிஞனுக்கும் (தெருப்பாடகன்) இதே வேட்கைதான். வாழ்க்கை நிரந்தரமற்றதெனக் காட்ட ''மயானத்தின் மேல் புல் மேயும் ஆட்டுக்குட்டி'' படிமமாக வருகிறது. அதேவேளை மரணத்தை வெல்ல முயலும் இன்றைய அறிவியலின் தோல்வியைக் காட்ட, ''மயானத்தைக் கடக்கும் மின்சாரக் கம்பிகளில் தேடலில் சோர்ந்து போன செண்பகத்தின் வெறுமை படர்கிறது'' என்னும் வரிகள் நிற்கின்றன.

ஆனால் எவை எப்படி இருந்த்போதும் இவற்றையும் மீறி இவற்றுக்கெல்லாம் தீர்வாக அடியோடும் விடுதலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லயிக்கவிழையும் மனிதனின் மனநிலையை, ''அதையும் மீறிப்பறிக்கிற பருந்தின் வட்டத்துள் சிக்கிய மனம்; வானமிழந்த வீட்டு நினைவோடு'' என்று அடுத்து வரும் வரிகள் காட்டிச் செல்கின்றன. பருந்தின் வட்டங்கள் கூட விடுதலைக்கு எல்லைதான். அதனால் தான் ''வானமிழந்த வீட்டு நினைவோடு'' என்று அதற்கும் அப்பால் அவாவி நிற்கிறது விடுதலையில் வேட்கை கொண்ட மனம். இது இக்கவிதையில் நான் காணும் ஒரு கருத்துப் பரிமாற்றம். இன்னும் பல அர்த்தவளம் நிறைந்த அழகான கவிதை இது.

அடுத்து ஒரு முக்கிய கேள்வி:

விடுதலை என் [illegible] ப்பு என்பதும் வெவ்வேறான வையா? ஒன் [illegible]

வெவ்வேறானவை என்று நினைத்தால் நாம் விடுதலை பற்றியோ இருப்புப் பற்றியோ எதுவும் அறியாதவர்கள் என்றே கூற வேண்டும். ஏனெனில் விடுதலை இல்லாமல் இருப்பு என்பது இருக்கப்போவதில்லை. ஒருவனிடம் எவ்வளவுக்கெவ்வளவு விடுதலை அதிகரிக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அவன் தன் இருப்பை விசாலப் படுத்துகிறான். இன்னும் தெளிவாகச் சொல்வதானால் ''இருப்பு'' என்பதே விடுதலைதான். இதன் வெளிக்காட்ட லாகவே ''தரப்பட்டுள்ள அவகாசத்தின்'' கவிதைகள் நிற்கின்றன.

இதோ இருபத்தைந்தாவது கவிதையில் வரும் சில வரிகள் இதைத் தெளிவுறக் காட்டுகின்றன.

''.... தொடக்கம் இது என்றும் இன்றி
உச்சி அல்லாத
ஒரு புள்ளியில் நின்று
குதித்துக் கொண்டிருப்பேன்
....இறப்பு இன்றி
ஏதோ ஒரு புள்ளியில்
உயிர்ப்புடன் இருப்பேன்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கம் உச்சி அல்லாதது எது? இறப்பில்லாத புள்ளி எது?

விடுதலையும் ''இருப்பும்'' ஒன்றென மிக நுணுக்கமாகச் சுட்டிச் செல்லும் கவிதை இது.

இனிவரும் அடுத்த கேள்வி. விடுதலை பற்றியும் இருப்புப் பற்றியும் ஒருவன் எப்பொழுது பிரக்ஞை கொள்கிறான்? இருப்பியல்வாதியான சாத்தர் (Satre) இதுபற்றிக் கூறுகை யில், ''எவ்வளவுக்கெவ்வளவு ஒருவனுக்கு பிரச்சினைகள் அதிகரிக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அவன் தனது இருப்பையும் விடுதலையையும் உணர்கிறான்'' என்கிறான். அதாவது தூக்குத் தண்டனை பெற்ற கைதி ஒருவன் , தனது தண்டனை நெருங்க நெருங்க தனது இருப்பையும் விடுதலையையும் கூடுதலாகத் தரிசிப்பவனாகிறான்.

இதோ ஒருவன் அனுபவிக்கும் பிரச்சினைகளின் உக்கிர த்தை கவிஞர் அழகாய் தனக்கே உரிய பாணியில் தருகிறார்:

''மிதமிஞ்சிய சுமைதாங்கி நடக்கிற
ஒரு கழுதையின் முதுகு எனமனம்,
பலவகைத் துயரங்களுடன்

துடைக்கவும் அப்புறப்படுத்தவும்
சிந்தனை ஆலாய்ப் பறக்கும்
கனத்தலின் தாங்க முடியாமை
எழுந்து இலக்கின்றி நடக்கவைக்கும்.
அலைச்சல்கள் ஓயா அலைச்சல்கள்
பெருமழையெனத் தொடர்ந்து
ஈவிரக்கமின்றி
கொட்டோ கொட்டென்று''

இத்தனைக்கும் மத்தியில்தான் ஒருவன் தன் இருப்பையும் விடுதலையையும் தரிசிக்கின்றான் என்பதை பின்வரும் வரிகள் காட்டுகின்றன.

தரப்பட்டுள்ள அவகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''முட்டியோ மோதியோ
தலைகீழாய் நின்றபடியோ
என் தரிசிப்புக்குச் சுதந்திரம் இருப்பின்
அதுவே போதும்''

மேலும் ''மூச்சை இழக்கத் தரப்பட்டுள்ள அவகாசத்தைக் கூட இம் முயல்தலுக்கே தந்துவிடுகிறேன்'' என்கிறார் கவிஞர். எனின் இதுபற்றிய அவரின் தேடலின் தீவிரம் புலனாகும்.

2

கவிதை, கதை, ஓவியம், இசை, சிற்பம் என்று கலைஞர்கள் ஈடுபடும் சிருஷ்டி இயக்கத்தின் அர்த்தம் என்ன?

ஒரு விஞ்ஞானி ஒரு பொருளைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் எடுத்துக் கொள்ளும் குறிப்புகள் போலவே, ஒவ்வொரு கலைஞனும் தன்னைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் எடுத்துக் கொள்ளும் குறிப்புகளாகவே அவனது சிருஷ்டிகளை நாம் நோக்க வேண்டும். ஒரு சிலரே கலைச் சிருஷ்டியின் இந்நோக்கை புத்திபூர்வமாக உணர்ந்து செயல்படுகின்றனர். ஆனால் அநேகர் இத்தகைய பிரக்ஞை எதுவுமின்றி, ஏதோ ஒரு உள் தூண்டலின் பணிப்பில் செயல்படுகின்றனர். அவர் அவர் நிற்கும் பார்வைத் தளத்திற்கேற்ப அவர் அவர் தற்கண்டுபிடிப்பின் (சுயத்தை அறிதல்) அண்மையிலும், தூரத்திலும் நிற்கலாம். இந்நிலையில் அவர் சிருஷ்டிகள், அவர் வாழும் காலத்தின் சமூக, பொருளாதார, அரசியல் சூழல் அவர் முயற்சிக்கு ஏற்படுத்திய சார்பான - எதிரான போக்கின் ஆவணப் படுத்தலாகவும் அமையும். இந்த ஆவணப்படுத்தலின் கலைத்தன்மை கூட அவர் நிற்கும் தளங்களின் ஆழங்களைப் பொறுத்தது. எது எப்படி இருப்பினும் இந்தியாவைக் கண்டு பிடிக்கப்போன கொலம்பஸ், வழிதப்பி அமெரிக்காவுக்குப் போய், அதை இந்தியாவென நினைத்து அங்கிருந்தவர்களை இந்தியர்கள் என அழைத்தது மாதிரி. ஒவ்வொரு கலைஞனும் இருப்பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டியாக நிற்கும் கலையின் உள்தூண்டல் புரியாது, வழிதப்பிப் போய் பிழையான கண்டுபிடிப்புகள் செய்து, அவற்றையே உண்மையென்றும் இடைத்தரிப்புக்களை முடிவென்றும் பறை சாற்றும் கலைஞர்களே இன்று அதிகம்.

தரிசனம் மிக்கவன் தன் கலைத்தூண்டலின் தன்மை அறிந்து, தனக்கு எதிராகவும் சார்பாகவும் நிற்கும் சூழலை ஊடுருவிக் கணக்கெடுத்தவனாய் நேராகவே தன் இருப்பை நோக்கி பயணம் செய்கிறான். எவ்வளவுதான் ஒரு கவிஞன் இயற்கை, சமூக, சூழல் பற்றிய விபரங்களை அழகிய சொற்களால் வர்ணித்துக் கவிதை வடித்த போதும், தன் கலையுணர்வின் பிரதான நோக்கான தற்கண்டுபிடிப்பின் வாகனமாக அவற்றை அவன் ஆக்காவிட்டால் அவன் தன் கலையுணர்வைத் துஷ்பிரயோகம் செய்தவனேயாவான். உண்மையான கலைஞன் தன் இருப்பை, தன் ஒவ்வொரு ஆக்கத்தின் மூலமும் ஊடுருவித் தொட முனைகிறான் என்பது மட்டுமல்லாமல் படிப்பவர் ஒவ்வொருவரிடமும் அந்த உத்வேகத்தைத் தொற்ற வைக்கிறான். இந்த உத்வேகத்தின் இறுதி முடிவு ஒவ்வொருவனையும் தத்தம் இருப்பை நோக்கி இட்டுச் செல்கிறது. அந்த இருப்பே சகலதின் இருப்பாகவும் விடுதலையாகவும் விரியும் பேருண்மையில் மானிட நேயத்தின் அர்த்தமும் சகல உயிர்களிடத்தும் நாம் கொள்ளும் அன்பின், இரக்கத்தின் அர்த்தமும் தெளிவாகிறது.

''விட்டு விடுதலையாகி நிற்கும் - அந்தச்
சிட்டுக்குருவியைப்'' பற்றி பாரதி பாடும் போதும்

''அக்கினிக் குஞ்சொன்றைக் கண்டேன்'' என்று ஆகும் போதும்

''காக்கை குருவி எங்கள் ஜாதி - நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்'' என்று களிகொள்ளும் போதும் அவன்தன் இருப்பையே - விடுதலையையே - எங்கும் காண்கிறான். அந்தக் களிபேருவகை உணர்வை எல்லோரிடமும் தொற்ற வைக்கிறான். இவனே கலைச்

தரப்பட்டுள்ள அவகாசம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிருஷ்டியின் உள் உந்துதலின் நோக்கை புத்தி பூர்வமாகத் தெரிந்து கொண்டு அதன்வழியே செயற்படும் உன்னத கலைஞன்.

இதற்கடுத்து வருபவர்கள் கலை உந்துதலைப் புத்திபூர்வமாக உணராத போதும், தம் உள்ளுணர்வாய் தம் சிருஷ்டிகளை அத்தகைய நோக்கின் பால் செயற்படுத்துவோர். இவர்கள் தவிர்ந்த ஏனையோர் எல்லாம் இடைத்தரிப்பாளர்கள், பிழையான தம் கண்டுபிடிப்புகளை உண்மையெனப் பிரசாரம் செய்யும் கலைத் துஷ்பிரயோகிகள்.

இவர்களுள் ஜபார் என்னும் கவிஞர் எந்த ரகத்தைச் சேர்ந்தவர்?

நிச்சயமாய் அவர் முதல் ரகத்தைச் சேர்ந்தவர் என்பதில் ஐயமில்லை. இவர் இடைத்தரிப்பாளரோ மாறாட்டக் கண்டு பிடிப்பாளரோ அல்லர். அதனால்தான் தனது பன்னிரண்டாவது கவிதையில் பிரக்ஞைபூர்வமாக இல்லாவிட்டாலும் பொங்கியெழும் உள்ளுணர்வின் வழிகாட்டலில் பின்வருமாறு கூறுகிறார்:

''கூடாரமடித்து உட்கார்ந்து விடுகிற
தளைகளை அணிந்த கனவுகளைத் தூரே வீசி விட்டு
வெறுமையுற்ற கைகளுடனும் மனத்துடனும்'' போனாலும் கனவுகளைக் கண்டு இடைத்தரிக்காது செல்லும் வீர்யம் இதில் தெரிகிறது. இதே உள்ளுணர்வு வழிகாட்ட மீண்டும் சொல்கிறார்:

''திசைகளின் சுருக்குக் கயிறுகள் அறும்
சந்திப்புகளுக்கப்பாலும் நீளுகிற
பெருவெளியின் வியாபிப்பில் எனது பயணிப்பு வலுப்பெறும்'' என்று கூறும்போது காலம் இடம் என்பவற்றை ஊடறுத்துத் தன் தேடலை நடத்தும் உத்வேகம் வெளிவருகிறது.

இருபத்தேழாவது கவிதையில் கவிஞர் நான் மேலே கூறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் ஏகக் கவிஞனின் பூரண சுயப்பிரக்ஞையுடன் தன் இருப்பின் தேடலில் இறங்குகிறார்.

''தேடலின் வியாபிப்பில்
உள்ளவைகள் சிறியனவாக
புதிய தரிசனங்களில்
என் பழைய முகங்கள்
உதிர்ந்து போகின்றன'' என்று கூறுமவர் தொடர்ந்து.

''புலன்கள் இசைகிற தொலைவுகளுக்கப்பால்
என் மனக் குதிரை
மிக அவதானமாக
புதியன தேடலில்...'' என்று வளர்த்துச் சென்று,

''திசைகள் தறிபட்டு
எல்லைகள் நழுவிப்போய்
தொலைவு நீளுகிறபோது
நான் பரிநிர்வாணமாய்
நடந்து கொண்டிருப்பேன்
அனைத்திலும்

இருட்டு அவசர அவசரமாக
ஆடைகளைக் கழற்றி விட்டு
நிர்வாணமாகிக் கொண்டிருக்கிறது''
என்று அழகாகத் தன் தேடலின் இயல்புகெடாமல் முடிக்கிறார்.

''பரிநிர்வாணமாக
நடந்து செல்வேன் அனைத்திலும்'' என்பது அர்த்த புஷ்டியான வார்த்தைப் பிரயோகம். இதன் மூலம் என் விடுதலையை அனைத்திலும் காண்கிறேன் என்பது மட்டுமல்ல நான் அனுபவிக்கும் விடுதலையே - இருப்பே - அனைத்துக்கும் பொதுவானது என்பதும் ஆகிறது.

''இருட்டு அவசர அவசரமாக
ஆடைகளைக் கழற்றிவிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாணமாகிக் கொண்டிருக்கிறது'' என்று கூறும்போது இன்னோர் முக்கியமான படிமம் வந்து விடுகிறது. அதாவது இரவில் அஞ்ஞானி தூங்கும் போது ஞானி விழித்திருக்கிறான் என்னும் கருத்தின் மெல்லிய கீற்று இக்கூற்றில் தெரிந்து பல அர்த்தங்களைக் கற்பிக்கிறது.

''தரப்பட்டுள்ள அவகாசம்'' தொகுப்பில் அடங்கியுள்ள இந்நீண்ட கவிதையும் ஏனையவையும் உண்மையான கலைஞன் ஒருவனின் கலைசிருஷ்டி என்பது அவனது சுயதேடலின் குறிப்புகளே என்பதற்கு தகுந்த உதாரணமாய் அமைந்துள்ளது கவனத்திற்குரியது.

3

''தரப்பட்டுள்ள அவகாசம்'' நூலில் அடங்கியுள்ள கவிதைகள் எழுதப்பட்ட காலம் தமிழ் பிரதேச அரசியல், பொருளாதார, சமூக, கலை கலாசார நிலைகளை பலவித இக்கட்டுக்குள்ளாக்கிய காலம். இந்திய அமைதிப்படையின் வரவு பல அனர்த்தங்களை விளைவித்திருந்த காலம்.

இத்தகைய சூழலிலும் கலைஞன் ஒருவன் தன் தேடுதலை நடத்தும் போது அவனுக்குச் சார்பாக - எதிராக நிற்கும் புறக்காரணிகளால் ஏற்படும் மன அவசங்கள் அவன் கலைச் சிருஷ்டிகளில் ஆவணப்படுத்தப்படுகின்றன. பாரதியின் இதேவகை ஆத்மீகத் தேடல் சுதந்திரப் போராட்டகால இந்தியாவின் சகல நிலைகளையும் ஆவணப்படுத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால் ''தரப்பட்டுள்ள அவகாசம்'' ஒரு குறுங்கவிதைகளின் தொகுப்பு. மேலும் இக் கவிதைகள் எழுதப்பட்ட காலத்துத் தமிழ் மண்ணின் நிலைமைகளைத்தான் சித்தரிக்கின்றது என்பதற்கான முழுச் சான்றுகளையும் இதில் காணமுடியாது. ஆனால் இதில் சித்தரிக்கப்படும் கலைஞன் ஒருவனின் மன அவஸ்தைகள், மனமுறிவுகள், ஆன்மீகவயப்பட்ட தேடுதல், விசாரணை கள் எல்லாம் இன்று உலகெங்கும் உள்ள புத்தி ஜீவிகளின் பொதுப்பண்பாக உள்ளது. இது கவிதைத் தொகுப்பின் பலம் என்றே கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இத்தொகுப்பில் அடங்கியுள்ள சில கவிதைகள் தான் வாழும் சூழலின் தனித்தன்மைகளை, போராட்டங் களை, பிரச்சினைகளை உள்வாங்கி எழும் கலா உச்சப் படைப்புகளாக பரிணமிக்கும் வளங்களைக் கொண்டிரு ந்தும் சந்தர்ப்பம் அளிக்கப்படாது குறுகத்தறிக்கப் பட்டுள்ளன. இதற்கு உதாரணமாக 'என்தவம் தொடங்கியாயிற்று'' என்னும் இருபதாவது கவிதையைக் குறிப்பிடலாம். இக்கவிதை தமிழ்ப் பிரச்சினைகளை உள்ளடக்கிய பெருங்காவியமாகவே விரியக்கூடிய வேர்கள் இருந்தும் அது வளர்க்கப்படாது குறுகத்தறிக்கப் பட்டதான உணர்வு எனக்குள். இதேவகை உணர்வு இருபத்தாறாவது கவிதையான ''கைக்குள் வசப்பட முடிந்த'' என்ற கவிதையையும், முதலாவது கவிதையான ''வழிநெடுகிலும் உதிர்ந்து கொண்டிருக்கிறது சாம்பல்'' என்ற கவிதையையும் சொல்லலாம்.

இனி இக்கவிதைகளில் கையாளப்படும் மொழி நடை பற்றியும், நாம் சிறிது கவனம் கொள்ள வேண்டும். உணர்வு - கருத்து ஆகிய இருதரப்பட்ட வார்ப்புகளின் ஊடகமாக இயங்கும் மொழி, ''தரப்பட்டுள்ள அவகாசம்'' தொகுப்பில் பின்னதினாலேயே அதிகம் போஷிக்கப்படுவதாகத் தெரிகிறது. அதனால் உணர்வுகளால் மெழுகப்பட்ட வற்றையே கவிதையாகக் கண்டவர்களுக்கு, இது ஒரு வித்தியாசமாகத் தெரியலாம். இன்னும் சிலருக்கு வரண்ட தன்மையைத் தருவதாகவும் இருக்கலாம். ஆனால் வேறுசிலர் கருத்தை மினுங்க விட்டு உணர்வு இக் கவிதைகளில் உள்ளடங்கி ஓடும் அழகை வியந்து ரசிக்கலாம். ஆனால் தமிழுக்கு அதிகமாகத் தேவைப்படும் அறிவின் நிமிர்வுக்குரிய வார்த்தைகள், சொற்கட்டு இக் கவிதைகளை அழகுபடுத்துவனவாக உள்ளன. மேலும் புதுச்சொற் பிரயோகங்களும் புதுவித படிம உண்மைகளும் ஆங்காங்கே இக் கவிதைகளுக்கு அழகூட்டுகின்றன. ''வெளிற்ற நினைத்து'' ''தரிசிப்புக்கு உருக்களாய்'', ''வெளிச்ச நோக்குகை'', ''வார்த்தைகள் உடுத்தியிருக்கின்ற ஆடைகள்'' போன்ற சொற்பிரயோகங்கள் இதற்கு உதாரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக புதுக்கவிதையில் இன்று அரிதாகவே கையாளப்படும் சந்த இசை பற்றியது. உணர்வுகளுக்கேற்ப ஓசைமாற்றம் என்பது புதுக்கவிதையில் இன்று மிக அரிதாகவே காணப்படுகின்றன. எல்லாப் புதுக்கவிதை களும் ஒரே ஓசைக் குவியல்களாகவே உள்ளன. இது ஏன்? உணர்வுகளின் ஏற்ற இறக்கங்களுக்கேற்ப, புதுக்கவிதைகள் சந்த வேறுபாடுகளைத் தரித்துக்கொள்ளும் பரிசோதனை களைச் செய்தவர் மிகச் சிலர் என்றே கூறவேண்டும். இக்குறைபாடு முக்கியமானது. இதன் நிவர்த்தி, இது பற்றிய தேவை அறிந்து பிரக்ஞை கொள்வோரின் கையிலேயே உண்டு.

''தரப்பட்டுள்ள அவகாச''த்தில் வரும் ''இருத்தல்'' என்று தொடங்குகின்ற முப்பத்திரண்டாவது கவிதையும் ''காதலி'' என்று தொடங்குகின்ற முப்பத்தி மூன்றாவது கவிதையும் ஓர் ஓர் உள்ளார்ந்த சந்த இசை ஒலிப்பனவாய் உள்ளதால் ஏனையவற்றிலிருந்து இயல்பு வித்தியாமாய் தெரிகின்றன. இப்படி இயல்பு கெடாமல் வந்த ஓசை வார்ப்புக்குரிய கவிதைகள் இன்னும் வெளிவர வேண்டும். எது எவ்வாறாயினும் ''தரப்பட்டுள்ள அவகாசம்'' தமிழுக்கு ஆற்றவிருக்கும் பங்களிப்பு சிறியதோ பெரியதோ என்பதைவிட தனித்துவமானதாய் இருக்கும் என்பது மட்டும் நிச்சயம்.

புங்குடுதீவு **மு.பொன்னம்பலம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராந்திய ஆதிபத்தியத்தின்
முதற் படுகொலைக்கு இரையான
பிரம்படி ஒழுங்கை மக்களின்
நினைவுகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிநெடுகிலும் உதிர்ந்து கொண்டிருக்கிறது
சாம்பல்
எரிகிற என் சிகரெட்டிலிருந்து
கிண்ணத்தைத் தவறவிட்டு
சிதைவின் முழுமையுணராது
அழுத்தமற்ற பாதப் பதிவுகளுடன்
நகர்கிறது வாலிபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமையின் பொருட்டு
கிளைகள் விரித்த மரத்தின் கீழே
உட்கார்ந்திருக்கிறேன்
என்னை அழுத்தி
என்மீது உட்கார்ந்தபடி
நிழல்

நான் நகர்ந்து விடாதபடி
என்னுள் இயக்கம் நிகழ
எனது நிழல் இருட்டை வரவழைத்து
ஒரு கணம் புரண்டு உருள
சூரியனின் பிறப்பையடுத்த நகர்வு
விழிகளைக் கசக்கித் திறக்க
மறுபடியும் என்னை அழுத்தி
என்மீது உட்கார்ந்தபடி
நிழல்

மரத்தின்கீழ் இன்னும் இருக்கிறேன்
மறுபடியும் மறுபடியும்
அழுத்தி அழுத்தியே நகரும்
நிழல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப் பிரமாண்டமாய்
சிறகு விரித்து அசைத்து
திரும்புகிற வரையில் இடம் தெரியாதபடி
பறந்துபோனது மனம்

உணர்வுகளுடன் புலன்களை விட்டுவிட்டு
உட்கார்ந்திருந்தேன்
அவசியத்துக்காய் அசைந்த கரம் பட்டு
அரைகுறைத் தண்ணீருடன் கீழ் விழுந்து
உடைந்து சிதறியது கண்ணாடிக் குவளை

முதனிகழ்வு புரியாது
அதிர்வுகளில் தழல் பெற்றுக்
கனன்றெரியத் தொடங்கியது
கபாலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு இரு என்று மணல்வெளி தடுக்கும்
ஒட்டிய மணல் உதிர்ந்து விழ
உதிர்ந்த சோகங்கள்
மறுபடியும் ஒட்டிக்கொள்ள
எழுந்துநிற்பேன் நடப்பதற்காய்
உயர எழுந்து சுருண்டு உருண்டு வந்து
உடைந்து நொருங்கிய
அலையின் துண்டொன்று
உமிழ்ந்து திரும்பும் தன்நுரை எச்சிலால்
தொடுவான நட்சத்திரங்கள்
கூடவர மறுக்கும்
நிலவு கூடவே வரும்
மேகங்கள் என் திசைக்கெதிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிதமிஞ்சிய சுமைதாங்கி நடக்கிற
ஒரு கழுதையின் முதுகு என மனம்
பல வகைத் துயரங்களுடன்

துடைக்கவும் அப்புறப்படுத்தவும்
சிந்தனை ஆலாய்ப்பறக்கும்
கனத்தலின் தாங்கமுடியாமை
எழுந்து இலக்கின்றி நடக்க வைக்கும்
அலைச்சல்கள் ஓயா அலைச்சல்கள்
பெருமழையெனத் தொடர்ந்து
ஈவிரக்கமின்றிக்
கொட்டோ கொட்டென்று

குறுக்கிடுபவைகளின் தரிசிப்பு
நிரந்தரமாய் ஒட்ட மறுக்கின்ற
சினேகிதங்களின் கேலிப்பேச்சுகள்
ஓசியில் கிடைக்கிற சிகரெட்டின்
புகை வளையங்கள் போல்வன
துடைத்தலையும் அப்புறப்படுத்தலையும்

தனிமையில் திரும்புகையில்
சுமையேறக் கழுதை நடக்கும்
பழைய மழை அடித்துப்
பின் மீளவும் ஒருமுறை
துடைத்தலும் அப்புறப்படுத்தலும்
நிகழ்கிற வரையில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைய வசந்தத்தின் சேமிப்பில்
பச்சை நிறத்திடமிருந்து
அன்னியப்பட்டுப் போகாத சடைத்த செடி
ஒற்றைப் பூவைத் தலையில் சுமந்து
மலட்டினை மீறிய பூரிப்புடன்

பாதிப் பகுதி பட்டுப்போன நிலையில்
பசுமையினை ஒருபுறம் தாங்கிய
நெடிதான மரம்
இருப்பில் விசுவாசமுள்ள
ஒரு தெருப்பாடகனாய்

மயானத்தின் மேல்
முகவரியிழக்கும் புல் வெளியில்
தனித்து மேய்ந்தபடி
ஓர் ஆட்டுக்குட்டி

மயானத்தை கடக்கும்
மின்சார கம்பிகளில்
தேடலில் சோர்ந்துபோன
ஒரு செண்பகம் வெறுமை படர்ந்திட

அதையும் மீறிப் பறக்கிற பருந்தின்
வட்டத்துள் சிக்கிய மனம்
வானமிழந்த வீட்டு நினைவோடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுக்குவியலுக்குள் அமிழ்ந்து
அடங்கிப் போய்க் கிடக்கிறேன்
ஒரு நுரைக் குவியலின் அடிப்பகுதியில்
மிக அமைதியாய் விறைத்துக் கிடக்கிற
ஒரு சவர்க்காரத் துண்டாய்

ஒவ்வொரு குமிழியாய் உடைந்து
உருச்சிதைந்து சிதறிச் சிதறி
காற்றுக்கும் வெய்யிலுக்கும்
கடந்தோடும் கணங்களுக்கும்
முகங்கொடுத்தழியும் குவியல்

அடுத்த குவியலின் சிருஷ்டிப்புக்காய்
கரைந்து தேயத் தயார்படும்
சவர்க்காரத்துண்டு
ஓர் அப்பாவியாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை ஓய்ந்த நேரமாய்ப் பார்த்து
நின்றுவிட்ட மின்சாரத்தின்மீது
ஆத்திரம் ஆத்திரமாய்.....
அறைக்கதவு திறக்கப்படினும்
அவசரத்துக்கு வரமறுக்கிற வெளிச்சம்
சீச்சீ................
தடுமாறலில் கண்டுபிடித்த
மெழுகுவர்த்தியுடன்
ஒரு கையில்
தீப்பெட்டியும் வெப்பமிழந்துபோக
நமுத்துப்போன குச்சிகளை
ஒவ்வொன்றாய் உரசி உரசி அலுத்து
இவ்வளவு குச்சிகளுக்குள்ளும்
இந்த இருளைச் சப்பித் தின்னக்
கிழிபட முடிந்த தீக்குச்சியைத்
தேடி எடுக்க முடியாமல்
திணறிப் போக.......
கிண்டல் பண்ணுகிற மாதிரி
ஒருமுறை வந்து--
மறுபடியும் நின்றுபோகும்
மின்சாரத்தின்மீது
இன்னும் ஆத்திரம் ஆத்திரமாய்.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுத்தை நெரிக்கிற துயரங்கள்
ஒட்டிப் பிறந்ததாய் உரிமை கொள்கிற
ஒப்பனைகள்
பழமைகள் மிகப் பழமைகள்
அனைத்தையும் வேறு வேறாய்
சிலுவைகளில் அறைந்து கொன்றேன்
திருப்தியுடன்
திரும்பி நடக்கையில்
புன்முறுவலுடன்
கைகுலுக்க முன்வந்தவைகள்
துயரங்கள்
ஒப்பனைகள்
பழமைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பெரிய க்யூவில்
என்னுடைய முறை வந்து
எப்பொழுது நான் வீட்டுக்குச் செல்வது
என்னுடைய வீட்டுக்கு

கடைசியும்அதுவுமாய் நிற்கிறேன்
வாழ்க்கையின் நெரிசலில் ஊர்ந்து
நசுங்குற மனமுமில்லாமல்
தூ............ரே
ஒதுங்கிப் போகவும் முடியாதபடி
கடைசியும் அதுவுமாய் நிற்கிறேன்

க்யூவின் நீளுகை அதிகரித்து
நெரிபட்டு நெரிபட்டு முன்சென்று
முன்னுணரப்படாத ஒரு கணத்தில்
க்யூவில் நான் வெளிப்பட்டு
நெரிசலில் கீலம்கீலமான இதயத்தை
ஒட்டிச் சரிபார்த்துக் கொண்டு
நுழைய முடிகிறது இன்னொரு க்யூவில்

எப்பொழுது நான் வீட்டுக்குச் செல்வது
என்னுடைய வீட்டுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டமிட்டு வட்டமிட்டு
வட்டத்துள்ளேயே
இருத்தலும் நகர்தலும் கூடுமாயினும்
முனைமீறிப் பறத்தல் தவிர்த்து
நுனிபிடித்து தொங்க நேரிடின்
தொட்டபடி இருக்கும்
பாதங்கள் வட்டங்களைத்
தொட்டபடி இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளிகளில் நின்றபடி
பறக்கிற கனவுகளை
இப்போதைக்குச் சேமித்துவை
நடந்து முடிப்பதற்கே
நிறைய இருக்கிறது இன்னும்
சிறகுகளைக் கத்தரித்துவிட்டு
கைகோர்த்துக்கொள்
நடக்க ஆரம்பிப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகிறேன்.........
திரும்பிப் பார்த்து திரும்பிப் பார்த்து
சுவடுகளை விழுங்கியபடி.
போகிறேன்.......
இந்தப் பாலை வெளியில்
கால்கள் புதையும்
புயல்களும் வலுவுடன் வீசும்
கூடாரமடித்து உட்கார்ந்து விடுகின்ற
தளைகளை அணிந்த கனவுகளைத்
தூரே வீசிவிட்டு
வெறுமையுற்ற கைகளுடனும்
மனத்துடனும் போகிறேன்----------
திரும்பிப்பார்த்து திரும்பிப்பார்த்து
சுவடுகளை விழுங்கியபடி
போகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாய்
நாயைப் பார்த்துக் குரைத்தது
அதற்கப்புறம்
மரத்தைப் பார்த்து
நிலவைப் பார்த்து
மனிதனைப் பார்த்து
நிழலைப் பார்த்து
தன்னைப் பார்த்து
குரைத்துக் கொண்டது
இப்பொழுது
பிரபஞ்சத்தைப் பார்த்துக்
குரைக்கத் தொடங்கியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரு விருட்சம்மீது
ஒரு மரங்கொத்திப் பறவை
அலகு பதிக்கும் புள்ளியில்
வாழ்க்கை
கண் அற்று கால் அற்று
நக்கரித்து நக்கரித்து........
எனினும்
உயிருருவும் விரல்களிடை
சுழலும் உலகு எனதல்ல
நமது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரமாய் மிக அவசரமாய்
பூமியை ஸ்பரிசித்து விடுகிற
அதீத நேயங்களுடன்
ஒக்கலையில் இருந்து நழுவுகிறேன்
பிடித்துக்கொள்
என்னை நழுவவிட்டு
ஒக்கலையை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதறிவிட்டுத்தான் எழுந்து நின்றேன்
மறுபடியும் ஒட்டிக் கொண்டது
தூசு
வெளிற்ற நினைத்து
ஆடைகளில் போட்டு
அழுத்தி அழுத்தித் தேய்த்தது
சோப்பையல்ல
அழுக்கைத்தான்
விழிகளைத் துடைக்கவே
விரல்களுக்கு அனுமதிப்பு
விழிகள் குடையப்பட்ட பின்புதான்
விழிப்பே வருகிறது
எந்த உணர்வுகளாயினும்
இதயத்திற்குள்ளேயே
அவலங்களாகிப் போக
ஊறிவருகின்ற எச்சிலால்
என்னை நானே
துப்பி நனைத்துக் கொள்கிறேன்
எனக்கேது சொரணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவாயும் உயரமாயும் நிற்கிற
இவ் வேலிகளுக்கப்பால்
தரிசிப்புக்கு உருக்களாய்
உண்மைகள் பல உள
விழிகளுடே புகுந்து
நேற்றைக்கோ சற்றைக்கு முன்போ
அன்றேல் எப்போதோ பதிந்து கொண்ட
உண்மைகள் பல உள

வேலி மீறி ஏன் அவை
புலப்படவில்லை எனக்கு
அப்பால் என்பது நிஜமாயின்
புலப்படலே சாத்தியம்

மெய்மைக்கு மறைவின்றேல்
எரிந்து கருகும் வரை தீமூட்டு
வேலி என்பது பொய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கத்திலிருந்து
இடப்பக்கமாக ஓடத்தொடங்கியது
என்வீட்டு மணிக்கூடு
விழித்து
பேந்தப் பேந்த விழித்தேன்
கிட்டிப்புள்ளையும் பறித்து
குழியையும் மூடிவிடப்
பேந்தப் பேந்த விழித்தேன்
நகர்தலில்
நகர்ந்த சூரியனும் கழன்று விழுந்து
நீருற்றுகள் வற்றிப்போக
கை கொட்டிச் சிரித்தன
கழுகுகளும் மிசாக்கரடிகளும்
வெளிச்சம் வர
இமை திறக்கும் வரை
இறந்து போய்க் கிடக்கிறேன்
என் இரத்தத்தை
நானே முத்தமிட்டபடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசை என்று நீ கருதுகிறபடி
விரும்பியவாறு பெயரிட்டு
எங்கு நோக்கியாயினும்
சுமக்க முடிந்த கற்களை விட்டெறி

பெரிய பாறாங் கற்களைக்
கடப்பாரை கொண்டு புரட்டிநகர்த்து
பற்றைகளை வெட்டி மைதானமாக்கு

ஓய்வுறுகையில்
உனது மீளத்தொடங்கும் அடியெடுத்து வைப்பு
எப்பக்கத்தை நோக்கி என்பதில்தான்
எனது கவனம் நிலைத்துள்ளது

எறிந்து நகர்த்தி புரட்டி
விரும்பியவாறே................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தவம் தொடங்கியாயிற்று.....
அறைபட்ட கன்னங்களையும்
சிலுவை சுமந்த முதுகுகளையும்
வெள்ளைநிறம் பூசப்பட்ட
கழுகுகளின் பிராண்டல்களையும்
விழிகளுக்குள் விழுங்கிக் கொண்டு
கண்ணீர் வர மறுத்துக்
கசிவிழந்த இமையோரங்கள்
திசைதோறுமிருந்தும் தெறித்த
இரத்தத் துளிகளால் உயிர்ப்புற
ஒரு வீர அனுமன் வேகம் வேண்டி
என் தவம் தொடங்கியாயிற்று.....

எனக்கு வால் முளைத்து வரும்போது
தீ மூட்டி விடுங்கள்
இந்த இலங்காபுரிகளை
ஒருமுறை
எரித்துப் பார்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள் குத்திய பாதங்களைக்
காலணி காத்தது
கடந்து போகையில்
கழிந்த கணங்களால்
பசியெடுக்கக்
கனிமரங்கள் கைகொடுத்தன
கானல்களையும் தாண்டி
நீரோடை அருகமர்ந்து
தாகமும் தீர்த்தாயிற்று

வெய்யில் தகிக்கிறது
இனி ஒரு மர நிழலுக்காய்
என் தேடுதல் தொடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வத்தையும் காற்றுத் தழுவுகிறபோது
எழும் சுகத்தை யார் தருவர்
பெருவெளியில் சஞ்சரிப்பதே சுதந்திர
முழுமை
அதனால்தான்
சுமைகள் தவிர்த்துக் கட்டுக்களை விடுவிக்கத்
துடிக்கிறேன்
விழுதல் தொடர்ந்து நேரிடினும்
மூச்சை இழக்கத் தரப்பட்டுள்ள அவகாசத்தை
முயல்தலுக்கே தந்துவிடுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றுவாக்கில் போகிறேனாம்
பொய்
முரட்டுத்தனமாய் இழுபட்டு
மிதிபடுகிற பொழுதே
நகரமுடிகிறது என்னால்
காயத்தின் மேல் காயங்களும்
என் படுக்கையில் முட்களும்
கனவுகளில் கூட
பெரிய பெரிய பாதங்கள்
காற்றுவாக்கில் போகிறேனாம்
பொய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பேன் என்பது நிச்சயமே
உன் வருகையில் தகர்ந்து
அநந்தரமாகும் என் பயணம் பற்றியே
பயம்

வானம் இறங்கி வருகிறது
சமுத்திரங்களும் முத்தமிடுகிறது
என் மணற் கரைகளில் உன்
ராட்சதச் சுவடுகள்
கணம் கணம் கண்டு
வெளியின் பெருமூச்சில்
சரியாத என் மரங்களும்
குப்புற விழுகின்றன

நெருங்கிக்கொண்டே கேள்
எனக்கென்னவோ
பயணித்துக்கொண்டிருக்கத்தான்
தோணுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைகளின் சுருக்குக் கயிறுகள் அறும்
சந்திப்புகளுக்கப்பாலும் நீளுகிற
பெருவெளியின் வியாபிப்பில்
எனது பயணிப்பு வலுப்பெறும்
கரையில் நின்று
அலை இறப்பதாய் நினைக்காது
அமிழ்ந்தும் தலையுயர்த்தியும்
கடலுள் இறங்குகையில்
அலையின் உயிர்ப்பைப்
புரிபவன் ஆயினேன்
தொடக்கம் இதுஎன்றும் இன்றி
உச்சி அல்லாத
ஒரு புள்ளியில் நின்று
குதித்துக் கொண்டிருப்பேன்
மோதி அன்றேல் குப்புற விழுந்து
சிதறுதல் திண்ணம்
இறப்பு இன்றி
ஏதோ ஒரு புள்ளியில்
உயிர்ப்புடன் இருப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளுக்குள் வசப்பட முடிந்த
ஒளிக்கீற்று மறுதலிப்புடன்
வெகுதூரம் போய்விட்ட பிறகு
தூக்கத்தைப் பறித்து
மிகக் குரூரமாய்ச்
சண்டை செய்கிற இரவுகளே
வந்து போகின்றன
காத்திருக்கிறேன்
மறுபடியும் காற்று வந்து
என் மூங்கில் காடு
தீப்பற்றி எரியுமென்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைகளிலாயினும்
உயிர்த்தெழுகிற விருப்புகளுடன்
என்னுள் நுழைந்து
என்னைத் தேடி வெளிக் கொணர்ந்து
இடைவெளியின்றிக் காலத்திற்குப் பின்னால்
ஓட முற்படுகிறேன்
நானே காலமாகிவிடத்
துடிக்கிற முனைப்புடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முளைத்தலிலிருந்தே
தாழ்ந்த குரலிலான கட்டளைகளைத்
தூண்டுதல் என நினைத்துச்
சுயத்தினை இழந்து போனேன்

பிரபஞ்சப் பெருவெளியில்
ஒரு சிறு அணுத்துண்டாய்
என் முகத்தையும் தொலைத்துவிட்டு
இருந்தேன் ஒரு சப்பாணியாய்

தவறவிட்ட கணங்களின்
புரியாமை மூடுதலில்
முளைத்து வந்த சிறகுகளும்
மறந்தே போயிற்று

நடத்தல் எனக்கு இயலாததல்ல
மூன்றாவதாய் எனக்கொரு
பாதம் தேவையில்லை
கைத்தடியைத் தூரே எறிந்துவிட்டு
எழுந்து நடக்கத் தொடங்கியிருக்கிறேன்
சொர்க்கமோ தேவதைகளோ
எனக்கு வேண்டாம்
முட்டியோ மோதியோ
தலைகீழாய் நின்றபடியோ
என் தரிசிப்புக்குச் சுதந்திரம் இருப்பின்
அதுவே போதும்

காலத்தின் பின் தொடர்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னையும் நிர்வாணமாக்கும்
என்கிற நம்பிக்கைக் கீற்றில்
கணங்களைக் கொழுத்தி
என்னைப் பட்டைதீட்டிக் கொள்கிறேன்

மூச்சறுந்த மரணத்தின் சுவடுகள்
என் பாதங்களுக்கிடையில்
மூர்ச்சையுற
என் வெளிச்ச நோக்குகை
இன்மையை விரட்டுகிறது
ஒரு கடிகாரத்தின் முட்களாய்
ஒரு வசந்தகாலக் குயிலாய்
வெய்யில் காலத்தில் புழுங்கி வியர்க்கிற
ஒரு மனித மேனியாய்
இருந்துகொள்ள நினைக்கிறேன்

முற்றுப்புள்ளிகள்
முணு முணுக்கிறது என்பதற்காகத்
தகர்ந்து போகாமல் இருப்பதில்லை
நிரந்தரங்கள்
வாடைத் தவிர்ப்புக்காய்
அத்திசைக் காற்றுக்கு
ஜன்னலைச் சாத்தியுள்ளேன்

நான் கொழுத்துகிற மெழுகுவர்த்திகள்
அணைக்கப்பட்டாலும்
ஒவ்வொரு விடியலிலும்
தரிசனம் தருகிற ஒரு சூரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுள்ளும் ஒரு சூரியனை
இருத்திவிட்டுப் போகிறது

தேடலின் வியாபிப்பில்
உள்ளவைகள் சிறியனவாக
புதிய தரிசனங்களில்
என் பழைய முகங்கள்
உதிர்ந்து போகின்றன

புலன்கள் இசைகிற
தொலைவுகளுக்கப்பால்
என் மனக் குதிரை
மிக அவதானமாக
புதியன தேடலில்
மிக மூர்க்கத்தனமாக
சவாரி செய்து கொண்டிருக்கிறது

திசைகள் தறிபட்டு
எல்லைகள் நழுவிப்போய்த்
தொலைவு நீளுகிறபோது
நான் பரிநிர்வாணமாய்
நடந்து கொண்டிருப்பேன்
அனைத்திலும்

இருட்டு
அவசர அவசரமாக
ஆடைகளைக் கழற்றிவிட்டு
நிர்வாணமாகிக் கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நெருப்பு எரியத் தொடங்கி
வெகுகாலமாயிற்று
அணைந்து எரிந்து அணைந்து
எரிந்து அணைந்து எரிந்து
....
எரிந்தபடிதான் இருக்கிறது
அணைந்தே போகாதபடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுதுளையிலும் பலகணியிலும்
குரூரமாய்ப் பற்கள் பதிக்கிற மனது
தவங்களும் வரங்களுமின்றி
அஸ்திரங்கள் பெறும் கணத்தில்
நொருங்கும்
காற்றை எட்டிப் பார்க்கமட்டும்
சீட்டு வழங்குகிற சுவர்கள் முழுவதும்
அடிபட்டு நொருங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரைப் பொறுத்து
அதுவே பாவமாய் இருந்தது
அதற்கு அவர் பாவமாய் இருந்திருப்பார்
அறைவதற்கு முன்னர்
அதை அவர் சுமந்தார்
அறைந்த பிறகு
அவரை அது சுமந்தது.

தரப்பட்டுள்ள அவகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோகத்தின் இருப்பு
ஒரு கல்லறையாக
உருகிக் காய்ந்த துளிகளின் மீது
உட்கார்ந்திருக்கிறது
ஒரு மெழுகுவர்த்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருத்தல் எழுதல் நடத்தல் என எதிலும்
ஏதோ ஒன்று என் இறப்பின் நிகழ்வுக்காய்
குறிபார்த்துக் கொண்டிருப்பதாக உணர்ந்து
விரல் ஈறாய் சர்வத்திலும் ஐயம் எழும்

அடிக்கடி என்றாயினும் அவ்வப்போது
என் இரத்தத்தை நானே குடித்து
என் சதைத் துண்டுகளை நானே சப்பித்
தின்று
என்னில் பூரணமிழந்து போயினும்
இறப்பின் நிகழ்வு விலகுவதான திருப்தி
வரும்

குறிபார்ப்பு உணர்தலின் உயிர்ப்பு நிலையில்
என் இரத்த வெறி சதைவெறி எதுவும்
அதிகரிக்க
சப்பித் தின்னலும் குடித்தலும்
அற்பமாகும் வரையில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலி
உன் வார்த்தைகள் உடுத்தியிருக்கிற
ஆடைகளை அவிழ்த்தெறி
நான் நிர்வாணமாகிக் கொள்கிறேன்
நூறாயினும் என
என்னை இறுகத் தழுவி முத்தமிடு
எஞ்சியிருக்கிற இடைவெளிகளைக்
காற்று நிரப்பட்டும்
தோப்புக்குள் ஒதுங்குதல் இன்றி
ஒட்டியுள்ளதைத் துடைத்தெறிந்துவிட்டு
வா
இந்தப் பெருமணல் வெளியில்
புணர்ந்தெழுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடி முகங்கள் சரியத் தொடங்கியுள
படிப்படியாக...................
கிரகிப்புக்கும் தோலுரிப்புக்குமாய்
கிரமம் பெறுகிற புலன்களின்
ஒளிர்தலுக்கு அப்படி ஒன்றும்
சூரியன் அவசியமில்லை

தழும்புகள் பதிந்த
மிகப் பழைய முகங்களது
பொய்மைகளின் சிதைவுகள்
சுடரத் தொடங்கியுள்ள எனது
ஆத்துமத்தின் பலம் பொருந்திய
பாதங்களுக்குக் கீழ் தான்

உதிரும்......... உதிரும்
உதிர்தலின் தொடரலில்
எனது விருப்புகளுள்
என்னை நானே பார்க்க வேண்டும்
நான் கவிதைகள் எழுத வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது ஆதியில்
கடவுள் எங்கோ இருந்தார்
விதம் விதமாய்
மனதுள் தோற்றம் காட்டி
எங்கோதான் இருந்தார்
பின்
எங்கும் இருப்பதாகப் புலப்பட்டு
சமீபமாகி
எனக்குள்ளேயும் இருந்தார்
என்னுடையவராகவேதான்
இவரின் தொடக்கம் என
உணரத் தலைப்பட்டபின்
இவரே இல்லாமலேயே
இருக்கிறார் தான்
ஐயோ கடவுளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால் எது
தலை எது
இடைநடுவில் தொடங்கி
இடைநடுவில் முடிந்து போகிறது
தொடங்கியதற்கு முன்னரும்
முடிந்துபோனதற்குப் பின்னரும்
இன்னும் உண்டு
பின்
கால் ஏது தலை ஏது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது பசி இது விரகம்
இது வறுமை இது சுரண்டல்
இது காயம் இது இரத்தம்
இது துப்பாக்கி இது மரணம்
இது துயரம் இது கண்ணீர்
இது விரக்தி இது தற்கொலை
இது அவஸ்தை இது போராட்டம்
இது வெளி இது விசும்பு
இது கடல் இது மழை
இது வெளிச்சம் இது பனித்துளி
இது பறவை இது பாட்டு
இது காற்று இது மூச்சு
சலித்து சோர்வுற்று
சாகலாம் போலிருக்கிறதா
மூதேவி
வாழ்க்கை உனக்குப் புரியப் போவதில்லை
போ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுற்ற இழையென ஊரும் பாதையில்
வண்டி புறப்பட்டு விரைகிறது
எரிபொருள் நெடியில் குமட்டும் வயிறு
தூசுப் படலம்
கண்கரிப்பும் தும்மலும் சலிப்பும்
அஜாக்கிரதையில்
எலும்புமூட்டுகள் விலகிப்போகும்
கரடு முரடாய் மேடு பள்ளம்
மேகம் ஓடிப் போகும்
இலையுள்ள மரமும்
இலையற்ற மரமும்தான்
கூட
இருள் ஒளி வெயில் நிழல்
முன்புறக் கண்ணாடி மீது
சராலென விழுந்து எம்பமுடியாது
அலைக்கழிக்கப்படும் பட்டாம்பூச்சி
திருப்பத்தில்-
இறக்கையின் சிறு துண்டிழந்து
தன்பாட்டில் பறப்பு
மின்னல்
துயரில் அமிழ்ந்து எதிர்கொள்ளத்
தானே நெறிப்படுகிறதாக்கும்
வாழ்க்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறகடிப்பிலிருந்து விடுபட்டு
மின்சாரக் கம்பிகளில் தொங்கி
ஊன் வடிந்து சிதைந்து கொண்டிருந்தேன்
ஒரு முதிர்ந்த வௌவாலாய்

சற்றைக்கு முன்
முற்றத்துச் செடியில் உட்கார்ந்த ஆந்தை
கபாலத்துள் அலறுகிறது

பனிக்காலம் முடிந்ததும்
பூக்களின் மீது ஒரு வண்ணத்துப்பூச்சியாய்
ஒரு கறுத்த முகில் துண்டாய்
அலங்காரத் தொட்டிக்குள்
ஒரு பிளக்மோறிஷாய்...
....
என் இருப்பு நீளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்து முடித்த பின்பு.....

சலிப்புற்ற தனித்தல் 'அந்நியம்' வரை அழைத்துச் செல்லும். இந்நிலையை எதிர்கொள்வதிலேயே வாழ்வின் மீதான தீராக்காதல் துளிர் கொள்கிறது. இதற்கு வாழ்தல் பற்றிய திடமான நம்பிக்கை அவசியம். இந் நம்பிக்கையுடன் வாழ்வின் உள்முகம் தேடிய எனது பேரார்வத்தின் வெளிப்பாடுகளாகவே இக் கவிதைகளைக் கருதுகின்றேன். இக் கவிதைகளின் காலம் மிக முக்கியமானது. முரண்பாடு, சார்பு, வழிபாட்டுத்தனம், ஆக்கிரமிப்பு, கொலையுணர்வு என்பவற்றின் வெம்மை உச்சத்திலிருந்த காலம். இக் காலத்து அனுபவங்களும் துயரங்களும் எவர்க்கும் பொதுவானவை. இவை எழுதப்பட்டு ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர் நூலுருவாக்கப்படும் இன்றைய நிலையிலும் இக் கவிதைகளில், சிதைவினூடும் துயரினூடும் நிமிர்ந்தெழு கின்ற ஓர் உள்ளோட்டம் இருப்பதாகவேபடுகிறது.

இக்கவிதைகளை அவ்வப்போது பிரசுரித்த திசை, இன்கிலாப், வகவம், விடிவு, முனைப்பு, கலங்கரை, ஆகவே, நிகழ் என்பவற்றுக்கும் மு.பொன்னம்பலம், அ.யேசுராசா, கோவை ஞானி, எம்.ஏ.நுஃமான், மருதூர் பாரி, தி.கேசவன், எம்.கே.எம்.ஷகீப், வை.ஜெயமுருகன், சு. இராஜதுரை என்பவர்களுக்கும் எனது நன்றிகள்.

மு.இ.அ. ஜபார்

204, மின்சார நிலைய வீதி,
திருகோணமலை,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்பத்தேழுகளின் முற்
பகுதியிலிருந்து எண்பத்
தெட்டுகளின் பிற்பகுதி
வரையில் எழுதப்பட்ட இக்
கவிதைகள் அக்காலத்தில்
தமிழ் மண்ணில் வாழ்ந்த
புத்திஜீவி ஒருவனின்
கொதிநிலை அடைந்த
மனவெளிக்காட்டலாகவும்,
அதே நேரத்தில் ஒவ்வொரு
பொதுமகனும் தன்னால்
புரிந்து கொள்ளமுடியாது,
தனக்குள்ளேயே ஜீரணித்து
விட்ட உணர்வுகளின்
பொதுப்பதிவாகவும் நிற்ப
தோடு, இவற்றுக்கும்
மேலாக இத்தனை மன
அவலங்களின் மத்தியிலும்,
இவற்றுக்கெல்லாம் தீர்வு
காண்பது போல் தன்
சுயத்தின் அடிநுனி தேடிய
ஒருவனின் ஆய்வின் ஆவ
ணமாகவும் இது நிற்பதே
மிக முக்கியமானதாகும்.
மேலும், ''தரப்பட்டுள்ள
அவகாசம்'' தொகுப்பில்
அடங்கியுள்ள கவிதைகள்
எவற்றுக்கும் தலைப்பிடப்
படாததால் இவை, இவ்
வுணர்வுகளின் பல வர்ணம்
காட்டும் கூட்டு பிம்பமாக
நிற்கின்றனவென்றால்
மிகையாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org